# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொறுப்பு) தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு.கி.சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.

ந.க.எண்.652/2021 தமா நாள். 05.05.2021.

---

பொருள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தருமபுரி மாவட்டம் - காரிமங்கலம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - முக்குளம் ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண்.59/1A2–ல் 5291.65 ச.மீ பரப்பளவுள்ள மனையில் G +3 தளங்கள் கொண்ட Type –A –ல் 1 Block -ம் + Type B –ல் 1 Block & Type C- 2 Block ஆக 4 பிளாக்குகளில் மொத்தம் 156 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு தொகுப்பு கட்டிடங்கள் கட்ட தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது - தொடர்பாக

பார்வை

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் கோட்டம் அவர்களின் எண்.13-1AEE(P)2020-2021, நாள்.05.04.2021, 28.04.2021 மற்றும் 05.05.2021.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னைஅவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 7486/2009 பிஏ2/1, நாள் 16.04.2009.
3. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள், 04.02.2019
4. அரசாணை(நிலை)எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள், 31.01.2020
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019/நஊ2 நாள் 31.10.2019.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019/பிஏ2 நாள் 6.11.2019
7. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 29.11.2018 (Insisting TNRERA Registration)

-------------

**உத்தரவு**

தருமபுரி மாவட்டம் ,காரிமங்கலம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், முக்குளம் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்.59/1A2–ல் 5291.65 ச.மீ பரப்பளவுள்ள மனையில் G +3 தளங்கள் கொண்ட Type –A –ல் 1 Block -ம் + Type B –ல் 1 Block & Type C-2 Block ஆக 4 பிளாக்குகளில் மொத்தம் 156 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு தொகுப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரிய விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் யாவும் பார்வை 1-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதங்களுடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. பார்வை 5-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் அதிகார பகிர்வின் படி உத்தேச பலகுடியிருப்பு தொகுப்பு கட்டிடத்திற்கு விதிகள் நிறைவு செய்கிறது, உத்தேச மனையிடத்திற்கு <u>'A to M '</u> என எல்லையிட்டு அம்மனை வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ(தமா)எண்.<u>20/2021</u> என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

50



**உத்தேச தொகுப்பு கட்டிடம் (Type A,B,C )**

**Type A-ல் (பிளாக் எண். 1 )**

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 279.48 x 1 | 279.48 | 7x1= 7 |
| முதல் தளம | 279.48 x 1 | 279.48 | 7x1= 7 |
| இரண்டாம் தளம் | 279.48 x 1 | 279.48 | 7x1= 7 |
| மூன்றாம் தளம் | 279.48 x 1 | 279.48 | 7x1= 7 |
| மொத்தம் | | **1117.92** | **28** |

**Type B-ல் (பிளாக் எண்- 2 )**

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 295.54 x 1 | 295.54 | 8x1= 8 |
| முதல் தளம் | 295.54 x 1 | 295.54 | 8x1= 8 |
| இரண்டாம் தளம் | 295.54 x 1 | 295.54 | 8x1= 8 |
| மூன்றாம் தளம் | 295.54 x 1 | 295.54 | 8x1= 8 |
| மொத்தம் | | **1182.16** | **32** |

**Type C-ல் (பிளாக் எண்- 3,4 )**

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 442.72 x 2 | 885.44 | 12x2= 24 |
| முதல் தளம் | 442.72 x 2 | 885.44 | 12x2= 24 |
| இரண்டாம் தளம் | 442.72 x 2 | 885.44 | 12x2= 24 |
| மூன்றாம் தளம் | 442.72 x 2 | 885.44 | 12x2= 24 |
| மொத்தம் | | **3541.76** | **96** |

**Total Built up area (FSI area) = 1117.92+1182.16+3541.76= 5841.84 Sq.m**
**(Type A +B+C )**

**Total No. of Units = (28 + 32+ 96) = 156**

**Park (OSR) area = 537.20 Sq.m.**

மேற்கண்ட பரப்பளவுடன் கூடிய உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு கீழக்காணும் சிறப்பு நிபந்தனைகள், நிபந்தனைகளுடன் கட்டிட வரைபடத்திற்கு க.வ/மா.ந.ஊ.அ(தமா)எண்.04அ.ஆ.இ.ச/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்பதல் அளிக்கப்படுகிறது,

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) இட அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள Park (OSR) ஒதுக்கீட்டிற்கான 537.20 ச.மீ. இடத்தினை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும். தானபத்திர நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு தொழில்நுட்ப அனுமதி மட்டுமே நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்படுகிறது. கட்டிட உறுதித் தன்மைகுறித்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் எவ்வித விதிகளோ நெறிமுறைகளோ வகுக்கப்படவில்லை, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட உத்தேச கட்டுமானத்தின் உறுதித்தன்மைக்கு கட்டிட உரிமைதாரர்கள், சம்மந்தப்பட்ட பொறியாளர், கட்டிடகலை வல்லுநர் உரிமம் பெற்ற அளவையாளர் மற்றும் ஒப்பந்ததாரரகளே பொறுப்பு ஆவர்.

3) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

4) 'நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி. கட்டிட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம் மற்றும் பட்டா, மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது,

'சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

5) மனையிடத்திலுள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அகற்றப்பட வேண்டும்.

6) தரை வரைபடத்தில் கட்டிடங்கள் கட்ட தடை செய்யப்பட்ட பகுதி என குறிப்பிட்டுள்ள இடத்தில் கட்டுமானங்கள் ஏதும் கட்டக்கூடாது.

7) This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019"

8) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி,
"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Act 2016, The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate regulatory Authority.''

<u>நிபந்தனைகள்-</u>

1) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுள்ளதாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறுஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந,நி,1) துறை, நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS & Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25(Water Act)-ன்படி மேற்படி வாரிய இணககம் பெறப்பட வேண்டும்.

13) அரசாணை நிலை எண்.17 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 15.2.2016-ன்படி Solar Panel பொருத்துவது தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

14) உத்தேச மனையிடத்தில் கட்டுமானம் நடைபெறும் சமயம் பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாத வண்ணம் கட்டுமானப் பகுதியினை சுற்றி பாதுகாப்பு அரண் அமைத்து கண்காணிக்கப்பட வேண்டும்.

15) கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

16) மேற்காண் உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு பார்வை 2-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி நன்னிலைவரியாக தொகை ரூ.29,100/- (ரூபாய் இருபத்தொன்பதாயிரத்து நூறு மட்டும்) அரசு கணக்கில் உரிய தலைப்பில் .05.2021 அன்று நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் அவர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்கும் படி ஊராட்சிமன்றத் தலைவர், முக்குளம் ஊராட்சி, அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்கள் கட்டிட அனுமதி பெற ஊராட்சிமன்றத் தலைவர், முக்குளம் ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5/5

உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
5/5/ தருமபுரி மாவட்டம்.

**இணைப்பு**
முத்திரையிடப்பட்ட வரைபடம் - 2 தொகுப்பு.

**பெறுநர்,**
ஊராட்சி மன்றத் தலைவர்,
முக்குளம் ஊராட்சி,
காரிமங்கலம் வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
-- உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் 2 தொகுப்பு.

**நகல்**
1. நிர்வாகபொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம்,
சேலம் கோட்டம், சேலம். -- உத்தரவு கடிதம் மட்டும்.

2. தொழில்நுட்ப வைப்பறை, -- உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம்.

EXECUTIVE ENGINEER,
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7.

முக்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.கே.காஞ்சனா., 55

ந.க.எண்.1/2021

நாள் : 08.06.2021.

பொருள் : கட்டிட அனுமதி அடுக்குமாடி குடியிருப்பு - காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் முக்குளம் ஊராட்சி - முக்குளம் கிராம சர்வே எண். 59/1எ2-ல் அமையும் 5841.84 ச.மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலத்தில் 03 பிளாக்குகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட கட்டிட அனுமதி வழங்க - உத்திரவிடல்.

பார்வை :1. உதவிஇயக்குநர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் தருமபுரி ந.க.எண்.652/2021/த.மா.நாள் : 5.5.2021.

2. இவ்வூராட்சியின் தீர்மான எண்.1/2020, நாள் : 08.06.2021.

---------

உத்தரவு:

காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் முக்குளம் ஊராட்சி முக்குளம் கிராம சர்வே எண்.59/1எ2-ல் அமையும் 5841.84 ச.மீட்டர், அளவில் தமிழ்நாடு அரசு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட வரைபடத்தில் உள்ளவாறு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 08.06.2021 முதல் 07.06.2022 வரை ஓராண்டு காலத்திற்குள் கட்டிக்கொள்ள தமிழ்நாடு அரசு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் ,என்பவருக்கு அனுமதி அளித்து இதன்வழி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
2. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
3. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
4. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
5. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டு எப்போதும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.
6. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் : 3.11.2004-ன்படி செப்டிக்டேங்கில் **"U" Trap** அமைத்தல் வேண்டும்
7. இக்கட்டிடத்தில் அவசரகால வெளியேறும் வழிகள் பொது கட்டிட விதிகளின்படி அமைக்கப்பட வேண்டும்.
8. இக்கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரும் சம்மந்தப்பட்ட பொறியாளரும் முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

K. Kanchana

தலைவர்
முக்குளம் ஊராட்சி மன்றம்
காரிமங்கலம் ஒன்றியம்

பெறுதல்

தமிழ்நாடு அரசு
குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம்.

EXECUTIVE ENGINEER,
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7.



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate